**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 09/2023

பெயர் – சங்கரேஸ்வரன்(வா.சா.2)

நாள் – 18.03.2026

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் இராமலிங்காபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நாட்டு சர்க்கரை வியாபாரம் செய்து வருகிறேன். எத்தனை வருடங்களாக செய்து வருகிறேன் என்றால் 3 வருடங்களாக செய்து வருகிறேன். இதற்கு முன்பாக நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் கிப்ட் ஷாப்பிங் கடை நடத்தி வந்தேன். அந்த கடையை எத்தனை வருடமாக நடத்தி வந்தேன் என்றால் 20 வருடங்களாக நடத்தி வந்தேன்.

2) வாதியான பால்ச்சாமி எனக்கு உறவினர் என்றால் சரியல்ல, அவர் எனது சமூகத்தை சார்ந்தவர் எனக்கு மாமா முறை ஆவார். பால்ச்சாமியிடம் ஆறுமுகம் பணம் கேட்ட விபரத்தை என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். அதன் பின்பு பால்ச்சாமி ஆறுமுகத்திடம் பணம் கொடுத்ததை எப்போது சொன்னார் என்றால் 01.06.2020ம் தேதி கொடுத்ததாகவும், அன்றைய தேதியிலிருந்து 10 நாட்கள் கழித்து என்னிடம் சொன்னார். அவ்வாறு பணம் கொடுக்கும் போது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை.

3) பணம் ஆறுமுகம் வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது என்று பால்ச்சாமி என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். பணம் கொடுத்த விபரம் குறித்து நான் நேரடியாக எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். பணம் கொடுத்தற்கு சான்றாக புரோநோட்டு எழுதி வாங்க வேண்டும் என்று பால்ச்சாமிக்கு நான் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல (சாட்சி பின்பு கேள்வி மீண்டும் கேட்கப்பட்டதற்கு அவ்வாறு புரோநோட்டு எழுதி வாங்க வேண்டும் என்று பால்ச்சாமிக்கு நான் சொல்லி தான் தெரியும் என்று கூறினார்). நான் சொல்லி தான் புரோநோட்டில் கையொப்பம் வாங்கினார் என்று சொல்லுவது பொய் என்றால் சரியல்ல.

4) இவ்வழக்கில் உள்ள சங்கதியை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், வாதி அழைத்தன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.